# பஸ்ஸரை பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 08 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, பஸ்ஸரை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

---------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்ளில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க தயாரித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

--------------------------------------------

(அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்களின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் தொடர்பாக கணக்குகள் தயாரிக்கப்பட்டு மற்றும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருப்புக்கள் தொடர்பான கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இருப்புக்கள் தொடர்பாக கணக்கீட்டு விடயங்கள் விலையிடல் என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

---------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் ஊழியர்கள் 08 நபர்களிடம் அறவிடப்பட்டிருந்த ஊழியர் பிணை வைப்புக்கள் ரூபா 29,232 இனை கணக்கீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக ஏக்கர்வரி மற்றும் அனுமதிப்பத்திர கட்டணம் முறையே ரூபா 45,540 உம் மற்றும் ரூபா 23,580 உம் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையால் வருமானம் ரூபா 69,120 இனால் குறைந்துள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்கான மானியமாக நபர் ஒருவருக்கு வழங்கியிருந்த ரூபா 10,000 இற்கான சிறுநீரக உதவி நிதி, உதவி நிதி மற்றும் மானியங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படவேண்டும் எனினும், மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய மூலதனச் செலவுகள் என ரூபா 10,000 தொகையினை பலவின கடன்கொடுத்தோர் என ஒதுக்கியிருந்த போதும், அவ்வாறான செலவு ஒன்று கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய முடிவுற்ற வேலைகளின் பெறுமதி ரூபா 11,536,995 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதியில் ரூபா 1,414,946 இற்கான மிகையாக ஒதுக்கப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் போது எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 40,000 தொகை ஒன்று போக்குவரத்து தேவைகள் சேவைகளுக்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், பிரயாண செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வைப்புக் கணக்கின் மீதியை விட ரூபா 502,585 இற்கான பெறுமதி ஒன்று பேரேட்டுக் கணக்கு மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டின் போது அரளுகொள்ள நீர்த் திட்டம் என்ற பேரில் செயற்திட்டம் ஒன்றிற்காக சபையினால் செலுத்தப்பட வேண்டிய முடிவுற்ற வேலையின் பெறுமதி என ரூபா 256,605 தொகை ஒன்று கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டத்தை அமுல் நடத்தியிருக்கவில்லை.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

சபையினால் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 20,756,450 ஆகக் காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 17,439,387 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 21,052,781 பெறுமதியான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கான சான்றுகள் சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்ய முடியாதுள்ளது.

1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிகள் 217 மற்றும் 218 | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான சபையினால் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்களும் ஒவ்வொரு வருடத்திற்கு ஒருமுறையும் பரிசோதனை மேற்கொள்வதற்கு தலைவர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 371 | 2006 ஆண்டில் வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 113,496 தொகையினை தீர்ப்பதற்கு பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 1646 | 2014 ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டுள்ள 05 வாகனங்கள் தொடர்பாக மாதாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை. |
| (இ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டம் | 2012 ஆண்டின் போது நிர்மாண வேலை ஒப்பந்தக்காரர்களிடம் அறவிடப்பட்டிருந்த ரூபா 13,821 இற்கான பெறுமதி கூட்டியவரி தொகையினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு காணப்பட்டது. |

2 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,609,095 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,783,025 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய குறைதல் ரூபா 6,173,930 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

--------------------------------------------------------------

(அ) முன்னைய ஆண்டின் போது நிலுவை வருமானம் அறவீடுகள் முறையே வீதவரி, நீர்க் கட்டணம், ஏக்கர்வரி, கடை வாடகை மற்றும் டென்டர் கடை வாடகை, 53.9%, 62.9%, 28.6%, 34.6% மற்றும் 49.3% வீதங்களில் காணப்பட்டது. நிலுவை வருமானம் அறவீடு செய்யும் முன்னேற்றம் திருப்திகரமற்ற நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது முறையே வாராந்த சந்தை கடை வாடகை, ஏக்கர்வரி, நீர்க் கட்டணம், வீதவரி ஆகியவற்றில் பில் போடப்பட்ட வருமானத்தில் அறவீடுகள் 19.6%, 38%, 53%, 71.7% ஆகும். இதன் பிரகாரம் ஆண்டிற்கான நிலுவை வருமான அறவீடுகளின் முன்னேற்றம் ஒன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

2.2.2 வீதவரி

----------

(அ) 05 வருடத்திற்கு ஒருமுறை வீதவரி திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் வீதவரி அறவிடப்பட வேண்டும். எனினும் 2014 ஆண்டு தொடர்பாக 2005 ஆண்டினை பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையாக வைத்து வீதவரி அறவிடப்பட்டு காணப்பட்டது.

(ஆ) நிலுவை வீதவரி ரூபா 364,499 தொகை ஒன்று தொடர்ந்தும் காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 கடைவாடகை

---------------------

(i) 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 கொண்ட உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வாடகையை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டும், எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் 20 கடைகள் தொடர்பாக 2005 ஆம் ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டை அடிப்படையாக வைத்து 500 வீதம் மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(ii) வாராந்த சந்தை வளவில் அனைந்துள்ள 13 கடைகளுக்காக 14 மாதம் முதல் 107 மாதம் வரை வாடகை நிலுவையாக காணப்பட்டதுடன், 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந் நிலுவை ரூபா 72,675 ஆக காணப்பட்டது. அந்த நிலுவை வாடகையை 1987 இல் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகள் 159(1) மற்றும் குறிப்பிட்ட வாடகை உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டு அறவீடு செய்வதற்கு அல்லது கடைகளின் உரிமையை சபைக்கு உரித்தாக்கி மீண்டும் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நிலுவை நீர்க் கட்டணம்

-------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீர்க் கட்டண நிலுவை தொகை ரூபா 1,763,925 ஆகக் காணப்பட்டதுடன் ரூபா 1,000 இனை மிகைத்த நிலுவை நீர்க் கட்டண நுகர்வோர் எண்ணிக்கை 484 ஆகும். ரூபா 1,000 இனை மிகைத்த நிலுவை நீர்த் தொடர்புகளை துண்டிப்பதற்காக 2014 அக்டோபர் 30 திகதி சபையின் அங்கீகாரம் ஒன்றினை பெற்றிருந்த போதும் 2014 திசெம்பர் 31 வரை அதனை அமுல் நடத்தியிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

---------------------------------------------

(அ) 1996 இன் போது மதிப்பளிக்கப்படாத ரூபா 43,212 பெறுமதியான 02 காசோலைகள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 189 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அப்பெறுமதியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) தலைவர் மற்றும் உப தலைவர் பயன்படுத்திய ரூபா 36,908 இற்கான SAMSUNG கையடக்கத் தொலைபேசிகள் இரண்டும் 2015 மே 15 திகதி அவர்களின் பதவிக்காலம் முடிவடைந்திருந்த பின்னரும் சபைக்கு திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை.

(இ) சபையினால் வாடகைக்கு கொடுத்திருந்த 03 கடைகள் தொடர்பாக குறிப்பிட்ட வாடகையாளரினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளத் தவறிய மின் கட்டணம் ரூபா 56,626 தொகையினை சபை நிதியத்தில் இருந்து இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி வரை அதனை குறிப்பிட்ட சாராரிடம் சபைக்கு அறவீடு செய்திருக்கவில்லை.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------

குப்பைகள் மற்றும் கழிவுப் பொருட்கள் அகற்றும் 03 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக கேள்வி கோரப்படாமல் ரூபா 782,325 தொகை செலுத்தி பெக்கோ இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

3.3 சுற்றாடல் தாக்கங்கள்

----------------------------------

(அ) சபையினால் 1980 இன் 47 இலக்க சுற்றாடல் சார் சட்டத்தின் மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்கம் கொண்ட திருத்த சட்டங்களில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதி வரை சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டிய தன்மையுள்ள 58 வர்த்தக நிலையங்களுக்கான 10 சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சார் சட்டத்தின் பிரகாரம் குப்பைகள் மீள் சுழற்சிக்காக சபையின் குறிக்கோள்களின் பிரகாரம் செயற்பட வேண்டும் எனினும், திறந்த பகுதி ஒன்றில் குப்பைகள் குவிப்பதன் காரணமாக சூழ உள்ள பகுதிகளுக்கு சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்

(ஆ) கணக்கீடு

(இ) வாகன கட்டுப்பாடு